# தலைவர்களின் உடன்படிக்கை



பிதாவாகிய கடவுளே,

மக்கள் மத்தியில், இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய ஒரு தலைவராக என்னை அழைத்த உம்மை நான் துதிக்கின்றேன்.

நான் முழு மனதுடன் எனது தலைவரும், ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றி அவர் வாழ்ந்த பாதையில் வாழ, மக்களை வழி நடத்த, உருவாக்க விரும்புகிறேன்.

தலைமைத்துவ பண்பில், இயேசு கிறிஸ்துவுக்கொத்த சாயலில் வளரவும், எனது செல்வாக்கு வட்டத்திலுள்ள அனைவருக்கும் உதவியாக இருக்கவும் உறுதியளிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவை போல வாழ்ந்திருக்கவும், வழி நடத்தவும் அவரின் கிருபைக்கு என்னை ஒப்புவிக்கின்றேன்.

**குறிப்பு:**

இந்த உடன்படிக்கையில் ஒரு ‘தலைவர்’ என்பவர் இயேசுவைப் போல வழி நடத்த விரும்பும் பிஷப், போதகர், அப்போஸ்தலர், சுவிசேஷகர், தீர்க்கதரிசி, டீக்கன், வேத ஆசிரியர், மிஷனரி, சபை ஊழியர், சபைத் தலைவர், மூப்பர், பணியிட ஊழியத் தலைவர், குழுத் தலைவர், கல்வியாளர் அல்லது ஆண்டவருக்கு ஊழியம் செய்ய விரும்பும் எவரும் இருக்கலாம்.

# அர்ப்பணிப்பு, ஒப்பந்தம், உடன்படிக்கை:

'அர்ப்பணிப்பு' என்ற வார்த்தை எங்கும் பரவலாக உபயோகப் படுத்தப்படுகிறது. ஒப்பந்தம் என்ற வார்த்தை இன்னும் கொஞ்சம் மதிப்பு கூடுதலாகவும் மற்றும் கூடுதல் எடையைக் கொண்டதாகவும் உள்ளது. ஆனால் ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு விட்டாலோ அல்லது ஒப்பந்தம் முறிக்கப்பட்டாலோ, அது முடிவுக்கு வந்து விடுகிறது. எது எவ்வாறாயினும், ஒரு உடன்படிக்கை இரண்டு நபரை அல்லது இரண்டு தரப்பினரை தனிப்பட்ட முறையில் பிணைத்து எளிதில் முறிக்க முடியாததும், எளிதில் முடிவுக்கு வரக்கூடததுமாக உள்ளது.

இரண்டு நபர்கள் உடன்படிக்கையில் கையொப்பமிடும்போது, சமமான தியாகம், சம வெளிப்படைத்தன்மை, பணிகளைச் செய்வதில் சமபங்களிப்பு, இதயத்தின் உணர்வுகளை பகிர்ந்துகொள்ளுதல் போன்றவற்றை ஒருவருக்கொருவர் முழு மனதுடனும், அர்ப்பணிப்புடனும் செய்கின்றனர். இரண்டு நபர்களுக்கிடையிலான உடன்படிக்கை அமலில் இருக்கும்போது, பகிரப்பட்ட சுமையின் உணர்வையும், ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் விசுவாசத்தையும் வெளிப்படையாக காண இயலும்.

பிதாவாகிய கடவுள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் புதிய உடன் படிக்கையை நிறுவுவதற்கு முன், நோவா, ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோருடன் செய்துகொண்ட முக்கிய அடிப்படை உடன்படிக்கைகள் நாம் அனைவரும் அறிந்ததே.

## வேதாகமத்தில் காணப்படும் ஐந்து அடித்தளமான உடன்படிக்கைகள்:

**நோவா:** கடவுள் நோவாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை வானவில் உடன்படிக்கை என பொதுவாக அழைக்கப்படுகிறது. கடவுள் நோவாவுடன் உடன்படிக்கை செய்த பிறகு, தீமை உலகத்தை அழித்துக்கொண்டே இருக்கிறதை காண்கிறார். ஆதியாகமம் 9:11

**ஆபிரகாம்:** ஆதியாகமம் 12, 15, 17ம் அதிகாரத்தில், கடவுளுக்கும் ஆபிரகாமுக்கும் இடையிலான மீட்பின் கூட்டாண்மை படிப்படியாக வளர்கிறதை காண முடியும்.

**மோசே :** இஸ்ரவேல் ஜனங்களுடன் கடவுள் ஏற்ப்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் விதிமுறைகளைக் கேட்க மோசே மலையில் ஏறினதையும் அறிந்துள்ளோம். யாத்திராகமம்:24.

**தாவீது:** கடவுள் தாவீதுடன் ஒரு உடன்படிக்கை செய்து, அவருடைய பெயரைப் பெருமைப்படுத்துவதாகவும், தாவீதின் பரம்பரையிலிருந்து ஒரு சந்ததியை எழுப்புவதாகவும், அவருடைய சிம்மாசனமும் இராஜ்யமும் என்றென்றும் நிலைத்திருக்கும் என உறுதியளிப்பதையும் 2 சாமுவேல் 7ம் அதிகாரத்தில் காண முடியும்.

**புதிய உடன்படிக்கை:** கீழ்ப்படியாமையினிமித்தம் நாடு கடத்தலுக்கு மத்தியில், எபிரேய தீர்க்கதரிசிகளாகிய எரேமியாவும், எசேக்கியேலும் கடவுள் ஒரு நாள் அவருடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவார், அவருடைய மக்களுடன் தனது உறவை சரிசெய்து, அவர்கள் மூலம் தேசங்களை ஆசீர்வதிப்பார் என கூறி ஒரு புதிய உடன்படிக்கையைப் பற்றி பேசுவதை எரேமியா 31:31-34, எசேக்கியேல் 36:22-32ல் காணலாம்.

**இயேசு கிறிஸ்துவே புதிய உடன்படிக்கையின் உச்சம்:** மனிதகுலம் தோல்வியுற்ற ஒவ்வொரு கட்டத்திலும் இயேசு கிறிஸ்து முழுமையாக வெற்றி சிறந்தார். அவரே புதிய மற்றும் சிறந்த உடன்படிக்கைக்கு உத்தரவாதம் அளிப்பவரும், மத்தியஸ்தரும் ஆவார். எபிரெயர் 7:22, 9:15.

**நமது உடன்படிக்கை:** பிரியமான, தேவ இராஜ்யத் தலைவர்களே, நாமும் ஆண்டவரின் அழைப்பை ஏற்று, அவருடன் உடன்படிக்கை செய்து, ஊழிய ஓட்டம் துவங்கி வருடங்கள் பற்பல ஆயிற்று. அழைத்தவர் உண்மையுள்ளவரானபடியால், இதுவரை நம்மை கைவிடாமல், உடன்படிக்கையில் உண்மையுள்ளவராயிருந்து, நடத்திவருகின்றார்.

மாறிவரும் கிறிஸ்தவ கலாச்சார சூழலில், இன்றைய கடினமான காலகட்டத்தில், பல்வேறுபட்ட குழப்பங்கள் மத்தியில், பல வருடங்களுக்கு முன்பு ஆண்டவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை நாம் மீண்டும் ஒரு முறை திரும்பிப்பார்ப்பது மிக மிக அவசியமானதாக உள்ளது.

பலவருட ஊழிய ஓட்டத்தில், பல்வேறுபட்ட அனுபவங்களை நாம் கடந்துவர ஆண்டவர் நமக்கு உதவியுள்ளார். உயர்வு, தாழ்வு, வறுமை, பசி, பட்டினி, வறட்சி, வனாந்திரம், போராட்டம், எதிர்ப்பு, துன்புறுத்தல், அவதூறுகள், கடுஞ்சொற்கள், ஏமாற்றங்கள், துரோகங்கள், சுகவீனம், பெலவீனம், கிருபை, தயவு, ஆசீர்வாதம், செழிப்பு, அதிசயங்கள் மத்தியில், ஆண்டவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் நாம் எவ்வளவு உண்மையுள்ளவர்களாக இருந்துள்ளோம் என்பதை திரும்பிப் பார்க்கவும், இனி வருங்காலங்களில், இன்னும் ஓர் வாய்ப்பினை கேட்டுப்பெற்று எவ்வாறு உடன்படிக்கையில் உண்மையாய் இருப்பது என்பதை தீர்மானிக்கவும் ஏற்ற தருணமிது.

கடவுள் பயம் மிகுந்த, கடவுளின் இராஜ்யத்திற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கக்கூடிய அடுத்த தலைமுறைத் தலைவர்கள் எழும்ப வேண்டுமானால், இன்றைக்கு நாம் முன் மாதிரிகளாகவும், நற்சாட்சியுள்ள தலைவர்களாகவும் வாழ்வது அவசியம். இயேசு கிறிஸ்துவைப்போல வாழவும், ஊழியம் செய்யவும், வழி நடத்தவும், உருவாக்கவும் தொடர்ந்து நம்மை நாம் அர்ப்பணிக்கும்போது, ஆவியானவரும் நம்முடன் இணைந்து, நாம் அனைவரும் ஒருமித்து கடவுளின் இராஜ்ய விரிவாக்கத்திற்காக உழைக்க நமக்கு அருள் புரிவார்.

‘நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி’ என்னும் வார்த்தையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிட மிருந்து அனுதினமும் கேட்க ஆயத்தமாவோம். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது என்னும் வேத வசனத்தினபடி (வெளி 22:12.) நமது கிரியைக்குத் தக்கதாக அளிக்கப்படும் பலனை பெற்றுக்கொள்ள தொடர்ந்து ஆயத்தமாவோம்.

வாருங்கள்! உடன்படிக்கைக்குள் செல்வோம்!!

# இயேசு கிறிஸ்துவுக்கு கணக்கு ஒப்புவிக்கும் தலைவர்கள் - 1

என் ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கு நான் பொறுப்பாக கணக்கு ஒப்புவிப்பதும் பதிலளிப்பதும் எனது கடமை. அவர் எனது அனைத்து செயல்பாடுகளையும் மதிப்பீடு செய்து வெகுமதி அளிப்பார் என அறிந்துள்ளேன். எனது ஆண்டவரின் இராஜ்யத்திற்காக தியாகம் மற்றும் மகிழ்ச்சியுடன் சேவை பணி செய்யும் வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டுள்ளேன் என்பதை அறிந்துள்ளேன்.

**2 கொரி 5:9 அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். 10 ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.**

கிறிஸ்துவுக்கு பொறுப்புக்கூறலை வளர்ப்பதற்கான வழிகளைத் தொடங்கவும், பகிர்ந்து கொள்ளவும் தனிப்பட்ட வாழ்வில் **ஒரு தலைமைத்துவ மாற்றத்தை தேர்வு செய்யவும்.**

- தனது தனிப்பட்ட திறமையை வெளிக்காட்டும் தலைமைத்துவ பண்பிலிருந்து எளிமையான தலைமைத்துவ பண்பினை கடைபிடித்தல்.
- தனது தனிப்பட்ட அந்தஸ்தினை வளர்க்கும் தலைமைத்துவத்திலிருந்து சேவைப்பணி தலைமைத்துவ மனப்பான்மையில் வளருதல்.
- மக்களின் நன்மதிப்பு மற்றும் புகழ்ச்சியை நாடும் தலைமைத்துவத்திலிருந்து, உள்ளத் தூய்மையை நாடும் தலைமைத்துவ பண்பினை வளர்த்துக் கொள்ளுதல்.
- பிறரை கவர்ந்திழுக்கும் செயல்பாடுகளை வளர்த்துக் கொள்ளும் தலைமைத்துவத்திலிருந்து, தனிப்பட்ட வாழ்வில் நேர்மை, உத்தமத்தை நாடும் தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ளுதல்.

- பெரும்பான்மை கூட்ட மக்களின் ஒப்புதலை நாடும் தலைமைத்துவத்திலிருந்து கிறிஸ்துவின் அங்கீகாரத்தை நாடும் தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ளுதல்.

ஆண்டவரே, உமது நாம மகிமைக்காக ஊழியம் செய்கிறேன் என கூறும் நபர்களை பிரியப்படுத்த எத்தனை முறை நான் அடிபணிந்து உமது நாமத்திற்கு மகிமையை செலுத்த தவறியுள்ளேன்.

நான் உண்மையையும், சத்தியத்தையும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய சூழ்நிலைகளில் மௌனம் காத்துள்ளேன்.

எனது புகழையும் பேரையும் தக்கவைத்துக் கொள்வதற்கு நான் எத்தனை முறை நேர்மையை சமரசம் செய்துள்ளேன்.

எனது உயர்விற்காக சக ஊழியர்களின் வளர்ச்சிக்கு நான் ஒரு தடையாக இருந்திருக்ககூடும் என்பதை உணர்கிறேன்.

நான் ஆண்டவருக்கு நெருக்கமானவன் என வெளிக்காட்டிக் கொள்வதற்காக சக ஊழியர்கள் மற்றும் சபை விசுவாசிகள் மீது அதிகாரம் மற்றும் ஆளுமை செலுத்தியுள்ளேன்.

ஆண்டவரே என் சுயநல சுபாவ குணத்தை மன்னித்து, பணிவு, தயவு மற்றும் கருணையின் வழியில் என்னை நடத்தி பரலோக வெகுமதியை தேட என் கண்களைப் பயிற்றுவியும்.

எனது ஊழிய வாழ்க்கை மற்றும் எனது தலைமைத்துவத்திற்கான நியாயத்தீர்ப்பு குறித்த சிந்தனை மற்றும் பயம் என்னை ஆண்டவரின் வழியில் நடத்தட்டும்.

நான் யார்? நான் கிறிஸ்துவுக்கு என்ன செய்கிறேன்? மக்கள் என்னைக்குறித்து என்ன கூறுகிறார்கள்? என்பதில் கவனம் செலுத்தாமல், கிறிஸ்து என்னைப் பற்றி என்ன சொல்வார்? என்பதை முன்வைத்து நான் எதைச் செய்தாலும், கிறிஸ்துவின் நாம மகிமையை விளங்கச் செய்வதற்காக மட்டுமே இருக்கட்டும். ஆமென்.

# இயேசுவைப்போல
# வாழும் தலைவர்கள் - 2

எனது வாழ்வில் உள்ளும் புறமும் இயேசுகிறிஸ்துவைப் போல இருக்கவும், எனது இதயத்திலும் வாழ்விலும் அவருடைய குணாதிசயங்களை பிரதிபலிக்கவும் நான் விரும்புகிறேன்.

**தீத்து 2:12-15**

**12. நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி,**

**13. நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.**

**14. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.**

**15. இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக.**

இயேசுவுக்குள் நமது வாழ்வு இன்னும் மேம்பட நாம் எடுக்க வேண்டிய ஆவிக்குறிய நடவடிக்கைகள்.

- தினசரி வேத வாசிப்பில் ஈடுபடுவது மட்டுமல்லாது வேத ஆராய்ச்சி மற்றும் பிரதிபலிப்பிலும் ஈடுபடுதல் அவசியம்.
- நாம் வாழும் வாழ்வியல் முறையினை ஆய்வுக்குட்படுத்தி, இயேசு கிறிஸ்து விரும்பும் வண்ணம் தேவையான மாற்றங்களை வாழ்வில் கொண்டு வரவேண்டும்.

- ▣இயேசு கிறிஸ்துவை முன்மாதிரியாக வைத்து, நமது குணாதிசயங்களை அவரது குணாதிசயங்களோடு ஒப்பிட்டு பார்க்கவேண்டும்.
- ▣கிறிஸ்துவைப் போல வாழ நமது வளர்ச்சிக்கு இலக்கை நிர்ணயித்து, அதற்காக உழைக்க வேண்டும்.

என் ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவைப் போல நான் மாற என் இருதயத்தின் ஏக்கத்தை அதிகரியும்.

இயேசுவின் வாழ்க்கையை இன்னும் அதிக கருத்தோடு கற்றறிந்து, அவற்றினை என் வாழ்வின் வழியாக நேசித்து ஏற்றுக்கொள்ள அருள் தாரும்.

இயேசு கிறிஸ்து சிலுவை மூலமாக காட்டிய அன்பு, தாழ்மை, மன்னிப்பின் வழியில் செல்ல எனக்கு உதவி செய்யும்.

கர்த்தராகிய இயேசுவே, நீர் என்னில் மேன்மேலும் வளர்ந்து, நீர் விரும்புவது போல் என் மனதையும், என் வாழ்க்கையையும் வடிவமையும்.

உமது பரிசுத்தமான அன்பினால் என் இருதயத்தை அசைத்து, எனது கண்களைத் திறந்து உமது மகிமையை என் கண்கள் காணச்செய்யும்.

ஒவ்வொரு நொடியும், நிமிடமும், மணி நேரமும் உமது சத்தத்தைக் கேட்டு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும்.

# இயேசுவைப்போல் ஊழியம் செய்யும் தலைவர்கள் - 3

கடவுளின் இராஜ்யத்தை கட்டியெழுப்புவதும் அவர் மக்களின் இருதயத்தில் ஆட்சி செய்வதற்காக உழைப்பதே எனது **முக்கிய அழைப்பு** என அறிந்துள்ளேன், அவ்வாறு இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் நான் கவனம் செலுத்தும்போது எனது குடும்பத்தினருக்கும் கடவுளின் வார்த்தைகளை போதித்து, கடவுளுக்கு பயந்து வளரும் குடும்பத்தை கட்டவும் அழைக்கப் பட்டுள்ளேன் என்பதையும் உணர்கிறேன்.

**3 யோவான் 9:** நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

இயேசு கிறிஸ்துவிற்கு மட்டுமே ஊழியம் செய்ய வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டிய ஆவிக்குரிய ஒழுக்க நெறிமுறைகள் :

- ஒவ்வொரு நாளும் இரவு தூங்கச் செல்வதற்கு முன் நம்மையும், நமது செயல்பாடுகளையும் சுய பரிசோதனை செய்வது அவசியம்.
- நமது வாழ்க்கை மற்றும் நாம் பயன்படுத்தும் தலைமைத்துவ நடைமுறை மற்றும் யுக்திகளை ஆராய்ந்து பிரதிபலித்தல்.
- ஒரு தலைவராக நமது நடத்தையை குறித்து விமர்சனம் மற்றும் கருத்துக்களை, ஆண்கள், பெண்கள், வாலிபர், முதியோர், குழந்தைகள் போன்ற அனைத்து தரப்பிலும் கேட்டறிதல்.
- நமது வழக்கமான உபவாச ஜெபங்களுக்கு அப்பாற்பட்டு, சுயத்தை வெறுப்பதற்கான பிரத்தியேக உபவாச நேரங்களை நாடவேண்டும்.

- நமது வாழ்வின் எல்லை எங்கும் பரிசுத்த வேலி அமைக்கப்பட, வேத வசனத்தை வாழ்வில் நடைமுறைப் படுத்துகிறவர்களாகவும், ஜெபத்தில் நடப்பவர்களாகவும், இருதயத்தில் பரிசுத்தத்திற்கான வேட்கை கொழுந்து விட்டு எரியும் வண்ணம், ஆவிக்குரிய புத்தகங்களை நாடி தேடி படிக்கின்றவர்களாகவும் இருக்க விழைய வேண்டும்.

ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவே, உம்மை மட்டுமே நான் நேசித்து, உமக்காகவே வாழ்ந்து, உமது நாம மகிமைக்காக மட்டுமே ஊழியம் செய்கிறவனாய் என்னை வழி நடத்தும்.

சுயத்தை முற்றிலும் வெறுத்து பரிசுத்த ஆவியானவரின் முழுமையான ஆளுகைக்குள்ளாக, நடத்துதலுக்குள்ளாக என் வாழ்வினை ஒப்புவிக்கின்றேன்.

நான் செய்யும் அனைத்து பணிகளிலும் மனிதனின் கிரியையை அல்ல, இயேசு கிறிஸ்துவின் கிரியையை மக்கள் காணட்டும்.

சுயம் என்னில் சாம்பலாய் போகட்டும், இயேசு கிறிஸ்துவின் வழியில் நான் நடப்பதையும், கிறிஸ்து என்னில் ஜீவிப்பதையும் பிறர் காணட்டும்.

இயேசு கிறிஸ்துவைப் போல் என்னைத் தாழ்த்தி எந்த தாழ்வான இடத்திலும், குறிப்பாக எனக்கு அதிக முக்கியத்துவம் தரப்படாத இடத்திலும் தாழ்மையுடன் அவரின் ஊழியத்தினை தொடர்ந்து செய்வேன்.

# இயேசுவைப்போல் வழி நடத்தும் தலைவர்கள் - 4

இயேசுவைப் போல(வே) வழிநடத்தும் ஒரு இருதயத்தை எனக்கு தாரும் ஆண்டவரே.

**லூக்கா 22: 25. அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப் படுகிறார்கள்.**

**26. உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக் காரனைப்போலவும் இருக்கக்கடவன்.**

**27. பந்தியிருக்கிறவனோ, பணிவிடைசெய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தி யிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்.**

இயேசுவைப் போல வழி நடத்துவதற்கு தனித்துவம் வாய்ந்த ஒழுக்க நெறிமுறைகள், கொள்கைகள், வாழ்க்கைத் தரம் அவசியம்.

**ஒவ்வொரு தலைமைத்துவமும் தனித்துவம் வாய்ந்தது.** அதைத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் விரும்புகின்றார். உங்கள் தலைமைத்துவ பண்பில் நீங்கள் என்ன புதிய ஒழுக்க நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும், என்ன புதிய வாழ்க்கைத் தரத்தை பின்பற்றவேண்டும் என்பதை தீர்மானம் செய்ய வேண்டும்.

- நாம் அதிக பிரயாசப்பட்டு, திட்டமிட்டு நடத்தும் நிகழ்ச்சி முக்கியமல்ல, எந்த மக்களுக்காக நிகழ்ச்சி நடத்துகின்றோமோ அவர்கள் மீது அதிக கவனம் செலுத்துவது அவசியம். ஆண்டவரின் நாமம் மகிமைப்படுவது மட்டுமே அவசியம்.

- சரியான ஊழியத்திற்கு ஆண்டவரோடும், அவர் அனுமதிக்கும் மக்களோடும் நாம் வளர்க்கும் நல்ல நட்பின் அடிப்படையிலான சகோதரத்துவ உறவு கடவுளின் இராஜ்ய வளர்ச்சிக்கு மிகச் சிறந்த அடித்தளமாக அமையும்.
- நமக்கான அந்தஸ்த்தினைவிட, கிறிஸ்துவுக்கான முக்கியத்துவத்தை நாடுவதே சிறந்த ஊழியம்.
- நமக்கு பிறர் சேவை செய்ய எதிர்பார்ப்பதைவிட, நாம் பிறருக்கு சேவை செய்ய விழைவதே சாலச் சிறந்தது.

புகழும், மாட்சிமையும் நிறைந்திருந்தும், தம்மைத் தாழ்த்தி, ஏழ்மைக் கோலமெடுத்து, தாழ்மையின் ரூபமாய், அடிமைத்தனத்தில் கிடந்த எங்களை மீட்க வந்த கடவுளின் மைந்தனாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,

உமது நாமத்தினால் தியாகத்துடன் பிறருக்கு சேவை செய்யும் ஊழியப் பாதையில் நடக்க வழிவகுக்கும் உம்மை துதிக்கின்றேன்.

ஆண்டவரே, அனைத்தையும் தூய்மையில் பார்க்க என் கண்களையும், இருதயத்தையும் தூய்மைப்படுத்தும். கனிவோடு பிறருக்கு உதவுவதற்கு எனது கரங்களை பயிற்றுவியும்.

யாருக்கும் தெரியாமல் பிறர் புலம்பும் புலம்பலின் சத்தத்தை கேட்க, எனது கேட்கும் திறனை கூர்மைப்படுத்தும்.

கடவுளின் அன்பினால் முற்றிலும் மூழ்கடிக்கப்பட்டு யாரும் செல்ல விரும்பாத இடங்களுக்கு சென்று ஊழியம் செய்ய என்னை அர்ப்பணிக்கின்றேன்.

# தலைவர்களை
# உருவாக்கும் தலைவர்கள் - 5

வளர்ந்து வரும் இளம் தலைவர்களின் வாழ்வு பலப்பட அனுதினமும் ஜெபிக்க எனக்கு எண்ணமும், கிருபையும் தாரும்.

**1 தீமோத்தேயு4:12.** உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. **13.** நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. **14.** மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. **15.** நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. **16.**உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.

பல தலைவர்கள், தாங்கள் வழிகாட்டியாக இல்லாததற்குக் காரணம், அவர்கள் ஒருபோதும் வழிகாட்டப்படவில்லை என்று ஒப்புக்கொள்கிறார்கள். வழிகாட்டியான வாழ்க்கையை வாழ கற்றுக்கொள்ள நாம் எவ்வாறு ஒழுக்கத்தை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளுதல் அவசியம்.

- வேதத்தில், வழிகாட்டும் தலைவர்களைப் பற்றிய வேத ஆராய்ச்சியில் குறிப்பாக மோசே, யோசுவா, பவுல் மற்றும் தீமோத்தேயு போன்றோரை பற்றி மேலும் அறிந்து கொள்ள தீர்மானித்தல் வேண்டும்.
- இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து, வாழ்வினை, ஊழியத்தினை நடத்தி, ஓட்டத்தை ஓடி முடித்த கிறிஸ்தவ தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை படித்து, வழிகாட்டுதல் எவ்வாறு அவரது வாழ்க்கையின் வளர்ச்சியை வடிவமைத்தது என்பதைக் கண்டறியவேண்டும்.

வழிகாட்டும் தலைமைத்துவத்தை வெளிக்காட்டும் மூத்த தலைவரை நேர்காணல் செய்து, அவரது வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசு கிறிஸ்துவுடனான உங்கள் அனுதின வாழ்க்கைப் பயணத்தை குறிப்பேடாக தொடர்ந்து எழுதவேண்டும். அவர் எவ்வாறு உங்களை ஊழியத்திற்கான தலைவராக உருவாக்கி வருகிறார் என்பதையும் குறிப்பிடுங்கள்.

ஒரு சக வழிகாட்டி குழுவை உருவாக்கி, பொறுப்புக்கூறல் மற்றும் கணக்கு ஒப்புவிக்கும் உறவுகளுக்கு சமர்ப்பிக்கவும்.

ஆண்டவரே, எனது வீண் அலைச்சல்களை குறைத்து, எனது வேகத்தை தாமதப்படுத்தி, உம்மை மேன்மேலும் அறிய விரும்பும் தலைவர்களோடு அமர்ந்து, குழுவாக எங்களை நாங்களே ஆராய்ந்து, ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக்கொள்ள உதவி செய்யும்.

போராட்டமான சூழ்நிலைகளில் உம்மை பின்தொடர்வதைக் குறித்தும், கடவுளுக்கு பயப்படும் பயத்தைக் குறித்தும், தொடர்ந்து தேவ புத்தியிலும், ஞானத்திலும் வளர்வதைக் குறித்தும் அறிந்து கொள்ள உதவும்.

இளம் கிறிஸ்தவ தலைவர்கள் இயேசுவைப் பின்பற்றி வாழும் வாழ்க்கை வாழ அவர்களுக்காக நான் ஜெபிக்க, உழைக்க என்னை அர்ப்பணிக்கின்றேன்.

இந்த உலகை விட்டு நான் உம்மிடம் வரும்போது, யாரும் செல்லத் துணியாத இடங்களில் உமது இராஜ்யத்தை விரிவுபடுத்த உறுதி பூண்டிருக்கும் தலைவர்களை உருவாக்கிய பாரம்பரியத்தோடு உம்மிடம் வருவேன். ஆமென்.

# இயேசு கிறிஸ்துவின் முகத்தை நோக்கிப்பார்க்கும் தலைவர்கள் - 6

இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, ஜெபத்திலும், அவருடனான தனிப்பட்ட ஐக்கியத்திலும் தொடர்ந்து இயேசு கிறிஸ்துவைத் தேட விரும்புகிறேன். அவர் அளிக்கும் கிருபையினால் அவரின் முகத்தை காண விரும்புகிறேன்.

**மாற்கு 1 : 35 - 39**

**35.**அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு,
வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்.
**36.**சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின்
தொடர்ந்துபோய், **37.**அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும்
தேடுகிறார்கள் என்று சொன்னார்கள். **38.**அவர்களை அவர்
நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ண
வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்;
இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி, **39.**கலிலேயா
நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர்
பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்
கொண்டும் இருந்தார்.

கடவுளின் முகத்தை காணத்துடிக்கும் வாஞ்சை, அவருடன் ஓர் அன்யோன்யமான உறவை வளர்க்கும், அவருடைய பிரசன்னத்தின் மகிழ்ச்சியை அனுபவிக்க உதவும்.

ஆண்டவரோடு உள்ள அன்யோன்யமான அன்பின் உறவினை மேலும் ஆழப்படுத்துவதற்கு எவ்வித ஒழுக்க நெறி பயிற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்?

கடவுளுடனான நெருங்கிய அன்பை ஆழமாக்குவதற்கான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

- வேதாகமத்தை, வருடத்திற்கு ஒரு முறையாவது முழுமையாக வாசித்து முடிக்க உறுதிமொழி எடுக்கவும்.

- **ஆஸ்வால்ட் சேம்பர்ஸ்** எழுதிய **மை அட்மோஸ்ட் ஃபார் ஹிஸ் ஹையஸ்ட்** போன்ற பக்தி விருத்திக்கான வாசிப்பு வழிகாட்டி புத்தகங்களை மாதம் ஒன்று வீதம் வருடத்திற்கு பன்னிரண்டு என தேடிப்பிடித்து வாங்கி படிக்கவும்.
- ஆவிக்குரிய ஒழுக்க நெறிமுறைகளை மேலும் கற்று அறிந்து கொள்ள **ரிச்சர்ட் ஃபாஸ்டர்** எழுதிய **செலிபரேஷன் ஆஃப் டிசிப்லைன்** போன்ற புத்தகங்களை படிக்கவும்.
- இருதயத்தின் வாஞ்சைகளை ஆராய்ந்து அறிய, உங்களின் ஆவிக்குரிய ஆலோசகர் மற்றும் வழிகாட்டியிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் கடவுளின் முகத்தை மட்டுமே தொடர்ந்து நோக்கிப் பார்க்கின்றீர்களா? என பொறுப்பை உணர்த்தி உண்மைத் தன்மையை தவறாமல் சரிபார்க்கும் நபர்களை நீங்கள் பெற்றிருக்க வேண்டும்.

உமது சமூகம் எவ்வளவு அற்புதமாகவும் உமது பிரசன்னம் எவ்வளவு அழகாகவும், இனிமையானதாகவும் உள்ளது. ஆண்டவரே, உமக்கு நிகரானவர் எவரும் இல்லை, நீரே எல்லா வற்றிலும் சிறந்தவர். நான் தினமும் உமது முகத்தைத் தேடும் பொருட்டு, உமது மகிமையை அனுதினமும் எனக்கு காண்பித்தருளும்.

தினமும் உமது முகத்தைத் தேடுவதினால், உமது அன்பின் ஜீவ நீரூற்றில் இருந்து நான் பருகி, மிகுந்த மகிழ்ச்சியையும், ஆழ்ந்த சமாதானத்தை அடைய விரும்புகிறேன்.

**ஆம்! ஆண்டவரே, உமது பிரசன்னத்திற்காக என் உள்ளத்தில் ஒரு நிலையான அழுகை உள்ளது. ஆனாலும், என் ஆத்துமாவின் கதறலை, வேண்டுகோளை புறக்கணித்து நான் மற்ற காரியங்களில் கவனம் செலுத்துகிறேன்.**

ஆண்டவரே, என்னை மீண்டும் ஒருமுறை மன்னித்து, உம்மை மேலும் அறிந்து கொள்வதில் என்னை திருப்தியாக்கும். ஆமென்!

# ஆவியின் கனியை வளர்த்துக்கொள்ள விழையும் தலைவர்கள் - 7

இயேசு கிறிஸ்துவின் மகிமைக்காக அதிக கனிகொடுக்க நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.

**யோவான்15:4** என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்.

இயேசு கிறிஸ்துவின் நற்பண்புகளின் தொகுப்பாகிய ஆவியின் கனி நமது தனிப்பட்ட வாழ்விலும் தலைமைத்துவத்திலும் காணப்பட வேண்டும். கலாத்தியர் 5:22-23.

எனவே, இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்களை நம்மில் வளர்த்துக்கொள்வதின் மூலம் நாம் ஆவியின் கனியை வளர்த்துக்கொள்ள இயலும்.

கனிதரும் வாழ்வினை வாழ பரிசுத்த ஆவியானவரே நமக்கு உதவி செய்வார். கிறிஸ்துவுடனான நிலைத்த உறவு, அவர் மீது நாம் கொண்டுள்ள தெய்வீக அன்பின் வழியாக, ஆவியின் கனி நம்மிடத்திலிருந்து புறப்பட்டு மற்றவர்களுக்கு செல்லும்.

ஆவிக்குரிய ஒழுக்க நெறிமுறைகள் நமது இருதயத்தை வளப்படுத்தி இயேசுவின் வாழ்க்கை முறையை பிரதிபலிக்க உதவும்.

ஆவியானவரின் ஆவிக்குரிய வடிவமைக்கும் பணிக்கு நமது வாழ்வை முற்றிலும் ஒப்புவிக்கும்போது ஆவியின் கனி நம்மில் வளர்வதைக் காண முடியும்.

ஊழிய வெற்றியில் கவனம் செலுத்துவதிலிருந்து தனிப்பட்ட வாழ்வில் ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் பலனை அடைய நாம் என்ன செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

- இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கிய, அன்யோன்யமான உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- ஒரு சிலரை தெரிந்தெடுத்து, சீஷத்துவத்தில் ஈடுபடுவதில் நமது நேரத்தை முதலீடு செய்யவேண்டும்.
- நாம் ஊழியம் செய்யும் மக்கள், கிறிஸ்துவின் சிந்தையில் வளர பொறுமையாக காத்திருக்க கற்றுக் கொள்ளவேண்டும்.
- நமக்கு தெரிந்த, அறிமுகமானவர்கள் பலனடைய, ஆவிக்குரிய கூட்டங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.
- வெற்றி பெற்றவர்களாக நம்மை வெளி காட்டிக்கொள்வதை விட, எல்லாவற்றிலும் உண்மையாக இருத்தலையே தேர்ந்தெடுத்தல் வேண்டும்.
- பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுவதற்காக எவ்வித வலியையும் பொறுத்துக் கொள்ள ஆயத்தமாக வேண்டும்.

அன்புள்ள ஆண்டவரே, உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்து வாழ, மெய்யான திராட்சைச் செடியாகிய உம்மில் ஐக்கியப்பட்டுள்ள ஒரு சிறிய கிளை நான்.

ஆவிக்குரிய வாழ்வில் மேலும் வளர்வதற்கு, களை எடுக்கப்பட்டும், வலிகள் நிறைந்த பாதை ஊடாக சுத்திகரிக்கப்பட்டுள்ளேன் என்பதை நன்கு உணர்ந்துள்ளேன்.

இயேசுவே, நீர் என் இருதயத்தில் விதைத்துள்ள விதையானது, பிரார்த்தனையால் நீர் பாய்ச்சப்பட்டு, வேத வசனத்தால் வேர் ஊன்றப்பட்டு, பரிசுத்த ஆவியினால் உருவாக்கப்பட்டு, நீர் என் வாழ்வாக அவதரித்துள்ளீர் என்பதை நான் உணர்கின்றேன்.. ஆமென்.

# சக தலைவர்களுடன் இணைந்து செயல்படும் தலைவர்கள் - 8

திரித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட, தலைவர்களுக்கான பண்பினையுடைய கூட்டுத் தலைமையை பின்பற்ற விரும்புகிறேன்.

**1 கொரிந்தியர் 3: 5. பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிற தற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. 6. நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். 7.அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிற வனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். 8.மேலும் நடுகிறவனும், நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.**

போட்டி மனப்பான்மையில் ஊழியம் செய்யும் மன நிலையிலிருந்து, இணைந்து ஊழியம் செய்யும் மன நிலைக்கு மாற நமது வாழ்வில் நாம் என்ன மாற்றங்கள் கொண்டு வரவேண்டும்.

- கடவுளின் இராஜ்யத்தைக் கட்டுவதற்கான மிகப் பெரிய தரிசனத்திற்காக, எனது சிறிய இலட்சியங்களை விட்டுக்கொடுத்தல்.
- நமது புகழ்ச்சிக்காக அல்லாமல், கடவுளின் நாம மகிமைக்காக மட்டுமே ஊழியம் செய்தல்.
- நமது உண்மையையும், உத்தமத்தையும் அங்கீகரித்து நமக்கு வெகுமதி வழங்கும் ஆண்டவரிடம் நித்திய வெகுமதியை பெற்றுக் கொள்ள ஊழியம் செய்ய வேண்டும்.
- நமது ஊழியப் பாணியிலிருந்து வேறுபட்டு, வித்தியாசமான ஊழியப் பாணியில் பணி செய்பவர்களுடன், பொறுமையாக பணியாற்ற கற்றுக்கொள்ள வேண்டும்.

- சக ஊழியர்களின் வெற்றிக்கு உழைக்கவும், உறுதுணையாக இருக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.
- தேவ இராஜ்ய வளர்சிக்கான கூட்டு முயற்சிக்கு, தாராளமாகவும், உதாரத்துவமாகவும் தங்களின் பங்கை வழங்கவும் தயாராக இருக்கவேண்டும்.

அன்புள்ள இறைவா, சக ஊழியர்கள் என்னை பயன்படுத்த முடியாமல் தடுக்கும் எனது பெருமை குணத்தை உடைத்தருளும்.

மனிதர்களின் அன்பையும், ஆதரவையும் இயேசு கிறிஸ்து எப்படி மதித்து ஏற்றுக் கொண்டாரோ, அப்படியே நானும் செயல்பட எனக்கு கிருபை தாரும்.

இயேசு கிறிஸ்துவைப்போல் என் வாழ்க்கை முழுவதும் சேவைப் பணி எனும் குணாதிசயத்தை உடுத்திக்கொள்ள எனக்கு உதவி செய்யும்.

நான் மற்றவர்களை அங்கீகரிக்கவும், மதிக்கவும் கற்றுக் கொள்ளவதினால் உருவாகும் மகத்துவத்தை பார்க்க எனக்கு உதவி செய்யும்.

ஆண்டவரே, உமது **ஊழியர்கள் ஒன்றுபட்டால்,** பெரிய காரியங்களை காணமுடியும் என்பதை உணரச்செய்யும்.

ஆண்டவரே, எங்களின் கண்களைத் திறந்து உம்மில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரை கண்டு உணரச்செய்யும்.

**பல்வேறுபட்ட ஊழியப் பாணியில் நாங்கள் ஈடுபட்டிருந் தாலும், ஒரே மெய்யான தேவனின் பொதுவான பணியில் மட்டுமே நாங்கள் ஈடுபட்டுள்ளோம் என்பதை மனதில் உணர்ந்து உழைக்க உதவி செய்யும்.**

உமது ராஜ்யம் வருவதைக் காண, உமது அன்பு எங்களைப் பிணைத்து, அனைவரையும் ஒருங்கிணைத்து வழி நடத்தட்டும். ஆமென்.

# இயேசு கிறிஸ்து தரும் பணத்தை உத்தமமாய் கையாளும் தலைவர்கள் - 9

கடவுளுக்கும், மனிதர்களுக்கும் முன்பாக, பாவப்பழிக்கு அப்பாற்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நிதியைத் தாழ்மையுடன் கையாள ஆண்டவரிடம் கிருபையை இறைஞ்சுகிறேன்.

**1 தீமோத்தேயு6: 9.**ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். **10.**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். **11.**நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

பணம் ஒரு பொருளாதாரக் கருவி, அது நமது தேவைகள், மற்றும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு பயன்படுகிறது. ஆவிக்குரிய தலைவர்கள் பணத்தை சரியான விதத்தில் கையாள கற்றுக்கொள்வது அவசியம். சில தலைவர்கள் பணத்தை நான் முற்றிலும் வெறுக்கின்றேன் என எதிர்வினையாற்றுவதும் சரியான நடைமுறையாகாது.

விசுவாச வாழ்க்கையையும், விசுவாசிகளின் உதாரத்துவத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் குழப்பிக்கொள்ளக் கூடாது. எந்த பொறுப்புக்கூறலுமின்றி ஊழியத்திற்கு வழங்கப்படும் பணத்திலிருந்து தமக்குத்தானே உதவி செய்துகொள்ளுதல் தவிர்க்கப்படவேண்டும்.

- கடவுளின் பணத்தை தவறாக கையாளத் தூண்டும் சோதனையை தவிர்க்க, நமது நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும்.

- ஊழியத்திற்கு கொடுக்கும் நன்கொடையாளர்களின் நோக்கத்திற்கு ஏற்ப நன்கொடைகளை பயன்படுத்துவதை உறுதிப்படுத்தவேண்டும்.
- பொருளாசை, பண ஆசையில் சிக்கிக்கொள்ளாதவாறு நமது இருதயத்தை தூய்மையாக வைத்து, காத்துக்கொள்ள வேண்டும்.
- ஊழியத்திற்காக வழங்கப்படும் பணத்தினை பயன்படுத்தும் விதத்தில் வெளிப்படைத் தன்மையுடன் இருத்தல் வேண்டும்.
- பணமோ எல்லாவற்றிற்கும் உதவும் என்றுதான் வேதம் கூறுகிறது, ஆனாலும் பண ஆசைதான் எல்லாத் தீமைக்கும் வேரானது என்பதை நினைவில் வைத்து செயல்பட வேண்டும்.
- யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுத்ததும் இந்த பணத்தாசையினாலேயே, கேயாசி குஷ்டரோகியானதும் இந்த பணத்தின் மீதான மோகத்தினாலேயே என்பதையும் நினைவில் கொண்டு நடப்போம்.
- முறையான மற்றும் தூய்மையான பண நிர்வாகம் இயேசுவுக்கும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும் மிகவும் அவசியமானதாகும்.

ஆண்டவரே எனது இருதயத்தின் விருப்பமெல்லாம் உமது அன்பைப் பெற்றுக்கொள்வதாக மட்டுமே இருக்கட்டும்.

**உண்மையாகவே, இந்த உலகில் உமது அன்பிற்கு ஈடு இணையாய் வேறு எதுவும் என்னை மகிழ்ச்சி அடையச் செய்ய முடியாது.**

தங்களின் பொருட்களையும், செல்வத்தையும் குறித்து மேன்மை பாராட்டும் மக்கள் இலவசமாக கிடைக்கும் உமது தூய அன்பினை ஒருபோதும் ருசிபார்க்க இயலாது.

**ஆண்டவர் பணமுள்ள தலைவர்களை அல்ல, நல்ல குணமுள்ள தலைவர்களையே விரும்புகிறார்.**

பற்றாக்குறையின் மத்தியிலும் உமது அன்பின் நிறைவை அனுபவித்து, உண்மையுடனும், தியாகத்துடனும் உமக்கு ஊழியம் செய்ய எனக்கு கிருபை அருளும். ஆமென்.

# ஊழியம் செய்ய புதிய துருத்தியை பயன்படுத்தும் தலைவர்கள் - 10

நான் என்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, பரிசுத்தத்துடனும், பணிவுடனும் ஆண்டவருக்கு ஊழியம் செய்து, நான் யார் மத்தியில் ஊழியம் செய்கின்றேனோ அவர்களும் ஆண்டவரோடு நெருங்கி நடக்க வாஞ்சிக்கிறேன்.

**பிலிப்பியர் 2:20-21**

**20.**அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு, என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை. **21.**மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.

பல வெளிநாட்டு போதகர்கள் மற்றும் ஊழியத்தலைவர்கள் தங்களுக்கு சிறந்ததாகக் கருதும் ஊழிய மாதிரிகளை பிரபலப்படுத்துகின்றனர். தேவ இரஜ்யம் விரிவடைய வழிவகுக்கும் ஊழிய மாதிரிகளின் மூலமாக ஆண்டவரின் நாமம் மகிமையடைவதாக. எவ்வித ஊழியமும் ஆவியானவரால் அபிஷேகம் செய்யப்படும்போது அது வல்லமை நிறைந்த ஊழியமாக இருக்கும்.

தேசங்களில் சுவிசேஷம் பரவுவதற்கு ஊழியத்திற்கான புதிய யுத்திகளையும், வழிமுறைகளையும் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

தகுதியுள்ள பெண் மற்றும் ஆண்களை பயிற்றுவித்து அநேகர் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள உழைக்க வழிகாட்டுதல் அவசியம்.

திறம்பட ஊழியத்தைத் தொடர புதிய ஊழியத் துருத்தியை தேர்ந்தெடுப்பீர்.

- நமது சூழலுக்கு பொருத்தமான ஊழியத்தை கருத்தில் கொண்டு தேர்ந்தெடுத்தல்.
- ஊழியங்களில் கிறிஸ்து அவற்றின் மையப்பகுதியில் உள்ளாரா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.
- இதற்கு முன்பு ஈடுபட்டிராத ஊழியத்தை துணிந்து தெரிந்தெடுத்து ஈடுபடுதல்.
- பிரபலமான கிறிஸ்தவ தலைவர்களை மட்டுமல்லாது, சாதாரண மக்களையும் அணி திரட்டும் ஊழியமாக இருப்பதை உறுதிப்படுத்துதல்.
- ஊழியத்தில் நமது பங்களிப்பு அங்கீகரிக்கப்படுதலும், மதிக்கப்படுதலும் அவசியமானது.
- மாற்றலுக்கு உட்படுத்த முடியாத ஊழியம் அல்லாது, சூழ்நிலைக்கு ஏற்ப வளைந்து கொடுத்து ஊழியத்தில் ஈடுபடுதல் அவசியம்.

ஆண்டவரே, நாங்கள் புதுவிதமான ஊழியங்களைக் குறித்து ஆராய்வதற்கும், பரிசோதனை முயற்சியில் ஈடுபடுவதற்கும், புதுமையான ஊழியங்களை கண்டுபிடித்து அறிமுகப்படுத்து வதற்கும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்துள்ளோம்.

ஏற்கனவே செய்துகொண்டிருக்கும் ஊழியங்களிலிருந்து புதிய ஊழியங்களை உருவாக்கவும், இதுவரையில் கண்டிராத ஊழியங்களை காணவும் நீர் எங்களின் மூளையை வடிவமைத்துள்ளீர்.

ஆவியானவரே, புதுவகையான ஊழியத்திற்கான காற்றினை எமது பக்கம் வீசச்செய்யும்.

தேவ இராஜ்ஜிய தலைவர்களெல்லாம் அசாதாரண ஊழிய வெற்றியை அடைந்து உயரட்டும். தங்களின் பெலவீனங்களில் கடவுளின் பெலத்தையும், எளிமையான வழிகளில் தெய்வீக ஞானத்தையும் கண்டறிய உதவும். எங்களின் மீதுள்ள உமது மகிமையின் முத்திரையை அனைவரும் காணட்டும். ஆமென்.

# இயேசு கிறிஸ்துவுடன் தலைவர்களின் உடன்படிக்கை

**மத்தேயு 16 : 24-27.**

**24. அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.**

**25. தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.**

**26. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?**

**27. மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.**

# நன்றி

ஜனவரி 2022ம் ஆண்டில் சென்னையில் துவங்கிய ‘இயேசு கிறிஸ்துவோடு தலைவர்களின் உடன்படிக்கை’ கருத்தரங்கம், இதுவரை இரண்டரை வருடத்தில் நமது மாநிலம் முழுவதும் 36 இடங்களில் நடத்தப்பட்டுள்ளது.

1762 போதகர்களுக்கும், சபைத் தலைவர்களுக்கும், தேவராஜ்ய பணியில் ஈடுபட்டுள்ள சகோதர சகோதரிகளுக்கும் ஊழியம் செய்ய கிடைத்த வாய்ப்பிற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

கூட்டங்களை நேர்த்தியாய் நடத்த உதவிய போதகர் ஐக்கிய சங்க நிர்வாகிகளுக்கும், தலைவர்களுக்கும், திருச்சபையில் இடமளித்து, கூட்டங்கள் நடத்த உதவிய போதகர்களுக்கும் எமது நன்றி.

இவ்வித கருத்தரங்கு நடத்துவதற்க்கு ஏதுவாக ஆவிக்குரிய ஏடுகளின் உள்ளடக்கங்களை நமது சூழலுக்கு ஏற்ப மாற்றி, மொழி பெயர்த்து பயன்படுத்த அனுமதி அளித்த அனைவருக்கும் நன்றி.

இத்தனை கூட்டங்கள் நடத்துவதற்கான தேவைகளை சந்தித்து, பிரயாணங்களை வாய்க்கச் செய்து, தேவ இராஜ்ய வளர்ச்சிக்கு பயனுள்ளதாகவும் ஆசீர்வாதமாகவும் மாற்றிய நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி.



# இயேசு கிறிஸ்துவுடன் தலைவர்களின் உடன்படிக்கை

எனக்கு முன் இவ்வுலகை விட்டு கடந்து சென்ற ஆவிக்குரிய தலைவர்களின் வரிசையில் நான் நிற்கிறேன் என்பதை உணர்ந்துள்ளேன்.

அவர்கள் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் அநேகரை ஆண்டவருக்குள் வழி நடத்தினார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் அவர்கள் மூலமாய் தம்முடைய இராஜ்யத்தை விரிவுபடுத்தினார் என்பதையும் நான் உணர்ந்துள்ளேன்.

என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக ஒரு தலைவராக எனது அனைத்து தோல்விகளையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

இயேசு கிறிஸ்துவைப்போல வாழவும், மற்றவர்களை உருவாக்கவும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் முழு ஆளுகைக்கு பணிவுடன் என்னை முற்றிலும் ஒப்புவிக்கின்றேன்.

ஆண்டவரே! உமது மகா அன்பினாலும், கிருபையினாலும், இரக்கத்தினாலும் இந்த உடன்படிக்கையில் உண்மையாக இருக்க எனக்கு உதவி செய்யும். ஆமென்.

*உலகெங்கிலும் உள்ள ஆவிக்குரிய தலைவர்களுடன் இணைந்து, இதை எனது தனிப்பட்ட உடன்படிக்கையாக ஆக்குகிறேன்.*

கையொப்பம் : ...........................................................

தேதி : ...........................................................